# மாநாட்டில் கி.வீரமணி தலைமையுரை!

5ஆம் பக்கத் தொடர்ச்சி

அது ஒரு பக்கத்தில் இருந்தாலும், ஒரே ஒரு செய்தி என்னவென்றால், யார் இருந்தாலும், இல்லாவிட்டாலும், இந்த இயக்கத்தினுடைய பணி தொடர்ந்து கொண்டே இருக்கும்.

அண்ணாவிற்குப் பிறகு கலைஞர் வந்தார்; கலைஞருடைய ஆட்சியை எப்படியாவது ஒழிக்கவேண்டும் என்று நினைத்தார்கள் தடுமாறி நின்ற வர்கள்.

ஆனால் கலைஞர் அவர்கள், "பாராட்டிப் போற்றி வந்த பழைமை லோகம், ஈரோட்டுப் பூகம்பத்தால் இடி யுது பார்!" என்று சொல்லி, இடித்துக் காட்டியவர்.

**அரசு மரியாதை தந்த கலைஞர்!**

அதன் காரணமாகத்தான் "அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் சட்டம்." அண்ணாவினுடைய ஆட்சி யின் சாதனைகளைச் சொன்னார் கள். "ஆட்சியே பெரியாருக்குக் காணிக்கை" என்று சொன்னார் அண்ணா அவர்கள்.

அறிவாசான் தலைவர் பெரியார் அவர்கள் மறைந்த போது, "என்னை ஆளாக்கிய தலைவருக்கு, சுயமரி யாதை இயக்கத்தைத் தோற்றுவித்த தலைவருக்கு, அரசு மரியாதை கொடுக்கவேண்டும்" என்று சொன்ன நேரத்தில், அரசு அதிகாரிகள் அச்சுறுத் தினார்கள் அவர்களுடைய கடமை யைச் செய்தார்கள்.

"ஒருவேளை உங்களுடைய ஆட் சிக்கு ஆபத்து ஏற்பட்டால் என்னா வது?" என்று கேட்டனர்.

உடனே கலைஞர் அவர்கள், "பெரி யாருக்கு அரசு மரியாதை கொடுத்த தால் என்னுடைய ஆட்சியை நான் இழந்தேன் என்றால், அதைவிட எனக்கு பேறு வேறு எதுவுமில்லை" என்றார்.

**கற்பாறை மீது கட்டப்பட்ட கருங்கோட்டை!**

எனவேதான், வடக்கே இருந்து வருகின்றவர்களுக்குச் சொல்கிறோம் எங்களை, இந்தத் திராவிட இயக்கத்த வர்களை மிரட்டிப் பார்க்காதீர்கள்; அச் சுறுத்திப் பார்க்காதீர்கள். ஆட்களைப் பிடித்து, கூலிப்படைகளைக் கொண்டு வந்து இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட லாம்; தோற்கடித்துவிடலாம் என்று நினைக்காதீர்கள்.

இது கற்பாறைமீது கட்டப்பட்ட கருங்கோட்டை இதை அசைக்க முடி யாது உங்களால்.

நீங்கள் வெறும் மணல்மேடுகள்; நீங்கள் சாதாரணமானவர்கள்!

முதலமைச்சர் அவர்களே, மாண் புமிகு செயல்திறன் உள்ள உலகத் தையே திரும்பிப் பார்க்க வைத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர் களே, மானமிகு முதலமைச்சர் அவர் களே, பெரியார் பிறந்த நாளை, "சமூக நீதி நாள்'' என்று அறிவித்து, ''அனைவருக்கும் அனைத்தும்'' என்று உறுதிமொழி எடுக்கச் சொன்ன முதலமைச்சர் அவர்களே, காலங்கா லமாக உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றது தமிழி னம்.

தமிழினம் அடிக்கடி நன்றியை மறந்து போகின்ற ஓர் இனம். அந்த இனத்திற்கு உங்களுடைய உழைப்பு, இன்றும் உழைப்பு, நாளையும், என் றைக்கும் இருக்கவேண்டும் என்பதற் குத்தான், இதோ நாங்கள் இருக்கி றோம்.

**உங்கள் வேலை "என்ட்ரி" எங்கள் வேலை "சென்ட்ரி"**

எங்கள் வேலை, கோட்டைக் குள்ளே போவது அல்ல; எங்களு டைய வேலை, கோட்டைக்குள்ளே உங்களை மீண்டும் அனுப்புவது கோட்டைக்குள்ளே நீங்கள்தான், 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகும் போகப் போகிறீர்கள்.

ஒரு நூறாண்டு, பல நூற்றாண்டு களின் வரலாற்றை அடைக்கப் போகிறது.

ஆகவேதான், உங்கள் வேலை 'என்ட்ரி' (Entry) எங்களுடைய வேலை 'சென்ட்ரி' (Sentry) அவ்வள வுதான்.

நாங்கள் வெளியே நிற்போம். எல் லையில் ராணுவ அதிகாரிகள், துப் பாக் கியை ஏந்திக் கொண்டு நிற்பார்கள். அவர்களுக்கு விழிகள் நன்றாகத் திறந்திருக்கும். எங்கே, யார் ஓட்டைப் போடுகிறார்கள்? எங்கே யார் வருகிறார்கள்? என்று கழுகுப் பார்வையோடு பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அந்தப் பார்வைதான், கருஞ்சட் டைக்காரனுடைய உயிர்க்கடமை!

அதைத்தான் தீர்மானமாக இன் றைக்கு வடித்திருக்கின்றோம்.

ஜப்பான், சிங்கப்பூர், லண்டனில் பெரியாரை முழங்கும் முதலமைச்சர் பெரியாரை உலக மயமாக்கும் எங்க ளுடைய பணியை நம்முடைய பணியை இன்றைக்கு நீங்கள் முன் னெடுத்துச் செல்கிறீர்கள் பெரியாரை உலகமயமாக்குவதற்கு நீங்கள் தயா ராகிக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு அச்சாரம்தான், ஜப்பானிலே முழங்கினீர்கள்; சிங்கப்பூரிலே முழங் கினீர்கள்; லண்டன் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் முழங்கினீர்கள். சுயமரியாதை இயக்கத்தைத் தொடங் கும்போது தந்தை பெரியார் சொன் னார், "இது ஒரு சிறிய எஞ்ஜின்; இது ஓர் ஊரோடு நிற்காது உலகத்திற்கே வழிகாட்டும்" என்றார்.

பெரியார் உலகமயமாகிக் கொண் டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில், 2026 ஆம் ஆண்டிலும் நீங்கள் கோட்டைக்குள்ளே போகவேண்டும். அது உங்களுக்காக அல்ல எங்களுக் காக அல்ல மக்களுக்காக அல்ல. ஓட்டு எண்ணிக்கை தேர்தல் அல்ல; சமூகத்தைக் காக்கின்ற தேர்தல்!

வருகின்ற தேர்தல் என்பது வெறும் ஓட்டு எண்ணிக்கை தேர்தல் அல்ல நண்பர்களே!

**வெற்றி தோல்வியைக் கணிக்கின்ற தேர்தல் அல்ல!**

நம்முடைய தலைவர்கள் உழைத்து, திராவிட இயக்கம் பாடு பட்டுத் தந்ததே சமூகநீதி

திராவிட இயக்கம் பாடுபட்டு, தலை வர் தந்தை பெரியார் அவர்கள் தந்தார் களே, அந்தச் சுயமரியாதை உணர்வு அந்த சமூக வாய்ப்பு, பெண்களுக்குச் சம வாய்ப்பு, சம உரிமை, இவற்றை யெல்லாம் காட்டுகின்ற தேர்தல்!

அம்பேத்கர் சொன்னார், சமத்து வம் என்று சொல்லும்போது, ஆங்கி லத்தில் ஈக்குவாலிட்டி என்று போட் டார்கள்.

ஒப்பற்ற முதலமைச்சர் அவர்களு டைய திராவிட மாடல் ஆட்சியின் சாத னையின் தனிச் சிறப்பு என்ன தெரி யுமா தோழர்களே, சமத்துவம்தான் முதல் கட்டம்.

இதுதான் திராவிட மாடல் ஆட்சியி னுடைய தனித்தன்மை, தனிச்சிறப்பு!

அடுத்தகட்டம், சமத்துவத்தோடு அல்ல. பெண்களுக்கு அதிகாரமளித்து, அவர்களுக்கு 50 விழுக்காடு கொடுத்து, அவர்களை அமர வைக்கவேண்டிய இடத்தில், அமர வைக்கின்ற ஒரே ஆட்சி இந்தியாவிலேயே இந்த ஆட்சியைத் தவிர, வேறு எந்த ஆட்சி?

**"மானம்" அறிவு உரிமை ஆட்சி!**

எனவேதான், மனுதர்மக்காரர்கள், மனுவின் மைந்தர்கள், வருணாசிர மத்தின் வாரிசுகள் இந்த ஆட்சி மீண் டும் வரக்கூடாது என்று நினைக்' கிறார்கள்.

இந்த ஆட்சி மீண்டும் வரவேண் டும் என்று நாங்கள் ஏன் நினைக் கின்றோம்?

எங்களுக்கு மானத்தைத் தருகின்ற ஆட்சி!

எங்களுக்கு அறிவைத் தருகின்ற ஆட்சி!

எங்களுக்கு உரிமைகளைத் தரு கின்ற ஆட்சி!

நான் தலைகுனிய விடமாட்டேன் என்று சொல்லி, சமரசம் செய்துகொள் ளாத ஒரு முதலமைச்சர் இருக்கின் றார் என்றால், இந்தியாவிலேயே திரா விட மாடல் முதலமைச்சர்தான் என்கின்ற பெருமையை நீங்கள் பெற் றிருக்கிறீர்கள்.

எனவே, உங்களுக்குத் துணை யாக இருப்பதுதான் எங்கள் வேலை!

இனி, ஆறு மாதத்திற்கு எங்க ளுக்கு எந்த வேலையும் கிடையாது.

எனக்கு 93 வயது என்றெல்லாம் சொன்னார்கள். அது எனக்கு நினை விற்கு வராது, வரவும்கூடாது.

என் நினைவிற்கு வரவேண்டியது கொள்கை எதிரிகள் அவர்களுடைய குதர்க்கங்கள்; அவர்கள் உருவாக்க லாம் என்று நினைக்கின்ற குடி படை பட்டாளங்கள் என்ன செய்தாலும், இந்த ஆட்சியைக் காக்க புகழ் நாடாத, பதவி நாடாத, நன்றி பாராட்டாத இந்த இயக்கம் தன்னுடைய பணிகளைச் செய்யும்.

பெரியாரை உலகமயமாக்குகின்ற பணி எங்கள் பணி;

எங்கள் பணி பிரச்சாரம். எங்களுக் குத் தெரிந்தது இரண்டேதான்!

ஒன்று பிரச்சாரம், இன்னொன்று போராட்டம்!

**உங்களைப் பாதுகாப்பதுதான் எங்களுடைய வேலை**

போராட்டமும், பிரச்சாரமும் கடிகா ரத்தில் உள்ள பெண்டுலங்களைப் போல ஓடிக் கொண்டிருக்கும்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், உங்க ளைப் பாதுகாப்பதுதான் எங்களு டைய வேலை.

உங்களுக்கென்றால், தனிப்பட்ட ஒரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பவரையல்ல. 'திராவிட மாடல்' என்ற காலங்காலமாக, பல்லாயிரக்க ணக்கான, ஆயிரங்காலத்துப் பயிரா கப் போற்றிப் பாதுகாக்கவேண்டிய ஓர் அற்புதமான முதலமைச்ச ரைத்தான்.

அவருடைய ஆட்சி மீண்டும் வந் தது என்று சரித்திரத்தினுடைய பொன் னேடுகளில் மீண்டும் இணைக்கப்பட வேண்டும்.

அதற்காக ஒன்றைச் சொல்லி, என் னுரையை முடிக்கின்றேன்.

இங்கே பல தீர்மானங்களை நிறை வேற்றி இருக்கின்றோம். அதில் கடை சித் தீர்மானமானத்தின் ஒரு பகுதியை மட்டும் படிக்கின்றேன்.

"திராவிட இயக்கக் கொள்கையில், சிறிதும் சமரசம் செய்துகொள்ளாமல், ஒன்றிய பா.ஜ.க. அரசோடு கொள் கைப் போராட்டத்தை நடத்தி, பொரு ளாதார இடர்ப்பாடுகளுக்கும் ஈடுகொ டுத்து, எல்லாத் துறைகளிலும் இந்தியா வில் முதன்மை மாநிலமாகத் தமிழ் நாட்டை நிர்மாணித்து, உலகத்தாரின் பாராட்டைப் பெற்று, நிகரில்லா ஆட் சியை நடத்தி, சாதனைக்கு ஓர் சரித்தி ரப் புகழ் ஆட்சி புரியும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை இந்தியாவும் கடந்து, உலக நாடுகள் வியந்து, போற்றி, பாராட்டிக் கொண்டிருக்கின்றன.

இதைக் கண்டு அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்த வெற்றிகளை அவர்களால் ஏற் றுக்கொள்ள முடியவில்லை.

ஆரியம் நினைத்தது கலைஞர் மறைந்துவிட்டார், அந்த இடத்தில் வெற்றிடம் என்று."

**வெற்றிடம் அல்ல கற்றிடம்!**

வெற்றிடம் என்று, இவர் வருவ தற்கு முன்னர் சொன்னார்கள். நாங் கள்தான் சொன்னோம், தாய்க்கழகம் தான் பிரகடனப்படுத்தியது "அடப் பேதைகளே, வெற்றிடம் அல்ல; இது தான் இனிமேல் கற்றிடம், கற்றிடம், கற்றிடம்" என்று சொன்னோம்.

அந்தக் கற்றிடத்தை, நீங்கள் இன் றைக்குப் பெரும் கட்டடமாக எழுப்பியி ருக்கிறீர்கள். பள்ளியாக இருந்தது; கல் லூரியாயிற்று. கல்லூரியாக இருந்தது; பல்கலைக் கழகமாயிற்று.

இந்த ஆட்சியை அசைத்துவிட லாம், விஷமப் பிரச்சாரங்களை செய் யலாம் என்று நினைத்துக் கொண்டு, எங்கெங்கோ இருக்கின்றவர்களை அழைத்து நீங்கள் வேவு பார்க்காதீர் கள். அது நடக்காது; நடக்கவும் விட மாட்டோம்.

இது பெரியார் மண்!

தமிழ் மண்!

மானத்தைச் சொல்லிக் கொடுக் கின்ற மறவர் மண்!

உரிமைக்காகப் போரிடுகின்ற மண்!

தலைகுனிய விடமாட்டோம் என்று சொல்லி, ஆயிரம் போர்களை வென் றெடுக்கக் கூடிய ஓர் அற்புதமான வீர காவியம் படைக்கக்கூடிய, ஒரு தளபதி யாக நின்று ஆட்சி நடத்தக்கூடிய மண்!

எனவே, உங்களுக்காகப் பணி செய்கிறோம் என்பதல்ல; இந்த இனம் காப்பாற்றப்படவேண்டும்.

அது வெறும் தேர்தலுக்காக அல்ல நண்பர்களே! தலைமுறை தலைமு றையாக, நம்முடைய தலைவர்கள் பெற்றுத் தந்ததை, தலைவர்கள் கற் றுத்தந்ததை நாம் பாதுகாப்பது மட்டு மல்ல, அதனை வளர்க்கவேண்டும்.

உங்களுக்கு என்றைக்கும் துணையாக இருப்போம்!

இதைத்தவிர, வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கின்ற தேர்தல் முடிந்து, நூறாண்டு காலம் வாழ்க இந்த ஆட்சி என்று, இதே மண் ணில் வெற்றி விழாவை நடத்து வோம்!

இன்றைக்கு எப்படி சுயமரியாதை இயக்கத்திற்கு வெற்றி விழாவோ அது போல, நீங்கள் பெறுகின்ற வெற் றியை, விழாவாக இந்த மண்ணில் அனைவரும் கொண்டாடுவோம்!

அதற்கு ஆயத்தமாவோம்! ஆயத்த மாவோம்!!

எதிரிகள், உதிரிகளாக வேண்டும். நம்முடைய உணர்வுகள் ஒப்பற்ற முறையில் இருக்கவேண்டும்.

முடியுமா? என்றுநினைக்காதீர்கள். முடிந்தாகவேண்டும்.

முடிப்போம் என்று சொல்லி, விடை பெறுகிறேன்.

வாழ்க பெரியார்! வளர்க சுயமரி யாதை இயக்கம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமை உரையாற்றினார்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று (06.10.2025) காணொலிக் காட்சியின் வாயிலாக அம்மாப்பேட்டை உணவு பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு ரூ.8.5 கோடி மதிப்பில் உயர் ரக உபகரணங்களை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சேலம், அம்மாப்பேட்டை உணவு பகுப்பாய்வு ஆய்வகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பங்கேற்றார். உடன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், உணவு பகுப்பாய்வாளர் எஸ்.நரசிம்மன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இ.பெரியசாமி தலைமை! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

# திண்டுக்கல் தொகுதி கழக நிர்வாகிகளுடன் கலந்தாலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

*திண்டுக்கல், அக். 7 -*

*தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (08.10.2025) திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகைதந்து அன்று மாலை 04.00 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்திலும், மாலை 6.00 மணியளவில் திண்டுக்கல், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர் அருகில், A.B. நகர், CKCM திருமண மஹாலில் நடைபெறவுள்ள திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுடன் கலந்தாலோசனை கூட்டத்திலும்,*

*09.10.25 அன்று காலை 9.00 மணியளவில் வேடசந்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வீரா.எஸ்.டி.சாமிநாதன் இல்லத் திருமண விழாவிலும்,*

*அதன்பிறகு 11.00 மணியளவில் வேடசந்தூர், அரசு மருத்துவமனையில் புதிய கட்டிடங்கள் திறப்பு விழா மற்றும் ரூ.55.00 கோடி மதிப்பிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா ஆகிய நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்.*





*ஊரக வளர்ச்சித்துறை அமைச்சரும் கழக துணைப் பொதுச் செயலாளருமான இ.பெரியசாமி தலைமையிலும், உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சரும், திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான அர.சக்கரபாணி மற்றும் பழனி சட்டமன்ற உறுப்பினரும் திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமாகிய இ.பெ.செந்தில்குமார் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எஸ்.காந்திராஜன் ஆகியோர் முன்னிலை யிலும் இந்நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.*

*08.10.2025 அன்று மாலை 6.00 மணியளவில் திண்டுக்கல், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர் அருகில், A.B.நகர், CKCM திருமண மஹாலில் நடைபெறவுள்ள திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதிச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள், தொகுதிக்குட்பட்ட மாவட்ட மற்றும் மாநகர சார்பு அணி அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளைச் செயலாளர்கள், அனைத்து பாகநிலை முகவர்கள் (BLA 2S) அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பி க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.*

### சேலத்தில்

# அம்மாப்பேட்டை உணவு பகுப்பாய்வு ஆய்வகம் திறப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்பு!

*சேலம், அக். 7 -*

*சேலம், அம்மாப்பேட்டை உணவு பகுப்பாய்வு ஆய்வகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பங்கேற்றார்.*

*முதலமைச்சர் அவர்கள் நேற்று (06.10.2025) காணொலிக் காட்சி வாயிலாக சேலம் மாவட்டம், அம்மாப்பேட்டை உணவு பகுப்பாய்வு ஆய்வகத்தில் ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் அதிநவீன உயர் ரக உபகரணங்கள், அயோத்தி தாச பண்டிதர் குடியி ருப்புப் பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் காரிப்பட்டி, வெள்ளாளகுண்டம், நடுவலூர் ஆகிய கிராமங்களுக்கு ரூ.2.81 கோடி மதிப்பீட்டில் அறிவு சார் மையங்கள், நபார்டு திட்டத்தின் கீழ் மாட்டுக்காரனூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடம் என மொத்தம் ரூ.12.29 கோடி மதிப்பீட்டிலான 5 திட்டப் பணிகளை திறந்து வைத்தார். இதனைத்தொடர்ந்து, சேலம், அம்மாப்பேட்டை, உணவு பகுப்பாய்வு ஆய்வகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.*

*இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.*

*முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள். அந்தவகையில் இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் சேலம், அம்மாப்பேட்டை உணவு பகுப்பாய்வு ஆய்வகத்தில் அதிநவீன உயர் ரக உபகரணங்களான* **LCMS/MS (Liquid Chromatography Tandem Mass Spectrometry)** *மற்றும்* **GC MS/MS (Gas Chromatography Tandem Mass Spectrometry)** *இந்த சாதனங்கள் மூலம் உணவு பொருட்களில் கலந்து உள்ள பயிர் மாசுகள் முறையே பூச்சி கொல்லிகள், பூஞ்சானங்கள் மற்றும் பிற நச்சு பொருட்கள் ஆகியவற்றை மிக துல்லியமாக கண்டறிந்து உணவு பொருள்களின் தரத்தை கண்டறியும் உபகரணங்களை திறந்து வைத்தார்கள்.*

*மேலும்,* **LC ICPMS (Inductively Coupled Plasma Mass Spectrometry)** *சாதனம் மூலம் உணவுப் பொருட்களில் சுற்றுசூழலில் காணப்படும் மனித ஆரோகியத்திற்கு தீங்கு விளைவிக்கும் கனரக உலோகங்களான ஆர்செனிக், ஈயம், பாதரசம், குரோமியம் போன்ற உலோக மாசுக்களை துல்லியமாக கண்டறிந்து உணவு பொருட்களின் தரத்தை கண்டறியும் உதவும் உபகரணமும் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.*

*அதேபோன்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மாட்டுக்காரனூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடமும், அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்புப் பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் வாழப்பாடி வட்டம், காரிப்பட்டி கிராமத்தில் ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் கிராம அறிவு சார் மையமும், வெள்ளாளகுண்டம் கிராமத்தில் ரூ.77.89 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவு சார் மையமும், கெங்கவள்ளி வட்டம், நடுவலூர் கிராமத்தில் ரூ.77.89 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவு சார் மையமும் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், உணவு பகுப்பாய்வாளர் எஸ்.நரசிம்மன், உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், அம்மாபேட்டை மண்டலக் குழு தலைவர் கே.டி. தனசேகர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



திருப்பத்தூர் ஒன்றியம், ராச்சமங்கலம் ஊராட்சி புள்ளானேரி வட்டத்தில் 6.15 லட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக் தரைதளம், திம்மணாமுத்தூர் ஊராட்சி பம்பாகுட்டை பகுதியில் 4.50 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் ஆகிய பணிகள் மற்றும் மாவட்ட ஊராட்சி பொது நிதியிலிருந்து 11.65 லட்சம் புதிய பணிகளை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.